2005 ஏப்ரல் 1]

அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைமைக்கேற்ப அம்மாவினுடைய ஆலோசனை பெற்று, அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6.5 கோடி தமிழக மக்களுடைய பாதுகாவலராக விளங்குகின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த நிதியாண்டிலேயே நிதிநிலைக்கேற்றவாறு என்னுடைய தொகுதிக்குட்பட்ட, நம்முடைய மாநிலத்தினுடைய எல்லைப் பகுதியில் இருக்கின்ற அரிசிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்திக் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு நம்முடைய தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதியிலேயிருக்கின்ற பொதுமக்களுடைய சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 270, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

270—

பேருந்துப் பணிமனை

***4289—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, கீரனூரில் பேருந்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளத்தூர் தொகுதி, கீரனூரில் அரசுப் பேருந்துப் பணிமனை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2005 ஏப்ரல் 1

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்து மக்களின் நலனுக்காகவே நாளெல்லாம் உழைத்துவரும் வாழ்நாள் சாதனையாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி எனது வினாவைத் தொடுக்கின்றேன். குளத்தூர் தொகுதியின் மைய இடமாக கீரனூர் விளங்குகின்றது. திருச்சி, புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையின் மையப் பகுதியில் கீரனூர் அமைந்துள்ளது. கீரனூரிலிருந்து குன்றாண்டார்கோவில், அன்னவாசல், இலுப்பூர், விராலிமலை, கிள்ளுக்கோட்டை போன்ற முக்கிய ஊர்களுக்கும், அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கும் நகரப் பேருந்துகள் சென்று வருகின்றன. இப்பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் வாழும் ஏழைக் கூலித் தொழிலாளர்கள், சிறு வணிகர்கள், திருச்சி, புதுக்கோட்டை போன்ற நகரங்களுக்குச் சென்று தங்கள் தொழில்களை முடித்துக்கொண்டு வருகின்றபோது இரவு 9–30 மணிக்குள்ளேயே பேருந்துகள் எல்லாம் புதுக்கோட்டை பணிமனைக்குச் சென்றுவிடுகின்றன. இதனால் தங்களுடைய கிராமங்களுக்குச் செல்ல முடியாமல் மக்கள் துன்பப்படுகின்றார்கள். மையப் பகுதியான கீரனூரில் ஒரு பணிமனை அமைக்கப்படுவதற்கு உரிய இடமும் ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்டுள்ளது. கீரனூர் பணிமனை கட்டப்படுமானால், கூடுதலாக ஒரு மணி நேரம் பேருந்துகளை இயக்க முடிவதோடு அரசுக்கு வருவாயும் அதிகரிக்கும் என்பதைச் சொல்லி, புதுக்கோட்டை பணிமனைக்கு பேருந்து சென்று வருகின்ற நேரமும் மிச்சப்படுவதோடு, பல ஆயிரம் லிட்டர் டீசலையும் சேமிக்க முடியும். எனவே, பேருந்து செல்லாத கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கி, அனைத்து குக்கிராமங்களுக்கும் பேருந்துகளை இயக்கி சாதனை படைத்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, கீரனூரில் ஒரு பணிமனை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூருக்கு அருகில் 29 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருச்சியிலே ஒரு பணிமனையும், கீரனூரிலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் புதுக்கோட்டையில் ஒரு பணிமனையும் இயங்கி வருகின்றன. பொதுவாக அரசாணை எண் D.No. 61, போக்குவரத்துத் துறை, நாள் 9–9–1992–ன்படி ஒரு புதிய பணிமனை அமைக்க*

2005 ஏப்ரல் 1]

வேண்டுமென்று சொன்னால் ஏற்கெனவே இருக்கிற பணிமனைக்கும் புதிய பணிமனைக்கும் உள்ள இடைவெளி 40 கிலோ மீட்டர் இருக்க வேண்டுமென்று அரசாணை உள்ளது. ஆனால், கீரனூரிலிருந்து 29 கிலோ மீட்டர் பக்கத்தில் திருச்சியில் ஒரு பணிமனையும், கீரனூரிலிருந்து 26 கிலோ மீட்டர் தொலைவில் புதுக்கோட்டையில் ஒரு பணிமனையும் இருப்பதால் அரசு விதிமுறைகளுக்கு ஏற்ப, கீரனூரில் ஒரு புதிய பணிமனை அமைக்க வாய்ப்பு இல்லை என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடுதலான கிலோ மீட்டர் இடைவெளி இல்லாததால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பணிமனை கீரனூரில் அமைக்கப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று சொல்லி இருக்கின்றார்கள். இருந்தாலும், இந்த ஆண்டில் அந்த கீரனூர் பகுதிகளிலே வாழக்கூடிய பொதுமக்களின் நலனைக் கருத்தில் எண்ணி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில், கீரனூரில் பணிமனை கட்டுவதற்கு மறுபரிசீலனை செய்து, ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணையை மாற்றுகின்ற சூழ்நிலை உருவானால், அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து அரசு பரிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 271, திரு. அ.இரா. மலையப்பசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

271—

விரைவுப் பேருந்து வசதி

***53118—திரு. அ.இரா. மலையப்பசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல்லிலிருந்து திருச்செந்தூருக்கு அரசு விரைவுப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?